GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**FAXA**

**6048–24**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Five-year Regular Course)

Fifth Year – Tenth Semester

CRIMINOLOGY AND PENOLOGY

Time : $2\frac{1}{2}$ hours                Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Crime is a natural phenomenon which is constantly changing with the social change." — Explain the statement.

   "குற்றம் என்பது ஒரு இயற்கையான நிகழ்வாகும், இது சமூக மாற்றத்துடன் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கிறது." — இக்கூற்றினை விளக்குக.

2. Who is a juvenile? Differentiate between juvenile and child. Explain why do they need justice system.

   இளஞ்சிறார் என்பவர் யார்? இளஞ்சிறாருக்கும் மற்றும் குழந்தைக்கும் இடையே வேறுபடுத்துக. அவர்களுக்கு ஏன் நீதி அமைப்பு தேவை என்பதை விளக்கவும்.

3. Define White collar Crime and briefly discuss White collar Crimes in India.

   செல்வாக்காளர் குற்றத்தினை வரையறுத்து, இந்தியாவில் செல்வாக்காளர் குற்றம் பற்றி சுருக்கமாக விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain Bonger's theory of Criminality.

   பாங்கரின் குற்றப்பழியுடைமை கோட்பாட்டினை விளக்கவும்.

5. What is recidivism? What are the causes of recidivism?

   மறுநிலைக்குற்றப்பான்மை என்றால் என்ன? இதற்கான காரணங்கள் யாவை?

6. Write a note on open air prison system in India.

   இந்தியாவில் திறந்தவெளி சிறைமுறையினைப் பற்றி குறிப்பு எழுதுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on <u>FIVE</u> of the following :
பின்வருவனவற்றுள் <u>ஐந்திற்கு</u> சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Classical School.
பண்டைய பயில் நெறியம்

(b) Mental Disorder and Criminality
மன பிறழ்ச்சி மற்றும் குற்றப்பழியுடைமை

(c) Cyber Pornography
இணைய ஆபாசப்படம்

(d) Dowry death
வரதட்சிணை மரணம்

(e) Polygraph Test
உண்மையை கண்டறியும் சோதனை

(f) Problems of undertrial prisoners
விசாரணைக் கைதிகளின் பிரச்சினைகள்

(g) Conditions of Parole
நாணய விடுதலைக்கான நிபந்தனைகள்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் <u>இரண்டிற்கு</u> சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A police officer who seized things when on an illegal search and he used it as a relevant evidence. Based on such evidence, can the court convict him? Discuss.
ஒரு காவல் அதிகாரி தன்னுடைய சட்டவிரோத சோதனையின் போது பொருள்களை கைப்பற்றி அதனை தகுந்த ஆதாரமாகவும் பயன்படுத்தினார். அத்தகைய சாட்சியங்களின் அடிப்படையில் நீதிமன்றத்தால் அவரை தண்டிக்க இயலுமா? விவாதிக்க.

9. A was convicted by the Court of Sessions without obtaining any report from the probation officer. Decide.
A என்பவரை, அமர்வு நீதிமன்றம் நன்னடத்தை அதிகாரியிடம் எந்த அறிக்கையும் பெறாமலேயே தண்டித்தது. தீர்மானிக்க.

10. In 2022, Geeta and Rahul got married and she gave birth to a baby girl in 2022. Later, due to severe abdominal pain, she died on 22nd March, 2023. Her husband and mother-in-law buried her body without informing her parents about her death. Discuss.
கீதாவுக்கும் ராகுலுக்கும் 2022 இல் திருமணம் நடந்தது. மேலும் 2022ல் அவருக்கு ஒரு பெண் குழந்தையும் பிறந்தது. அதனை தொடர்ந்து, மார்ச் 22, 2023 அன்று மிக கடுமையான வயிற்றுவலியின் காரணமாக அவர் இறந்தார். அவரது மரணம் குறித்து அவருடைய பெற்றோரிடம் தெரிவிக்காமல், கணவரும், மாமியாரும் அவரது உடலை அடக்கம் செய்தனர். விவாதிக்க.

———————

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**FAXB**

**6024–24**

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A.L.L.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Five-year Regular Course)

Fifth Year – Tenth Semester

INTELLECTUAL PROPERTY LAW

Time : : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define "Infringement of Trade Marks". Explain which acts do not constitute infringement of Trade Marks.

   "வணிக முத்திரை உரிமை மீறல்" என்பதை வரையறை செய்க. எத்தகைய செயல்கள் வணிக முத்திரை உரிமை மீறலாகக் கருத முடியாது என்பதை விளக்குக.

2. Explain the procedures to obtain the grant of patents under the Patents Act, 1970.

   காப்புரிமைச் சட்டம் 1970ன் கீழ் காப்புரிமை பெறுவதற்குண்டான நடைமுறைகளை விளக்குக.

3. Define "Copy Right Owner". Discuss the remedies available to the owner of copyright in case of infringement.

   "பதிப்புரிமை உரிமையாளர்" எனும் சொல்லை வரையறை செய்து உரிமை மீறலுக்கு எதிராக பதிப்புரிமை உரிமையாளர் ஒருவருக்கு கிடைக்கக் கூடிய தீர்வுகள் என்ன என்பதை விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the power and duties of Controller under the Designs Act 2000.

   2000ம் ஆண்டு வடிவமைப்பு சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டாளரின் அதிகாரம் மற்றும் கடமைகளை விவாதிக்கவும்.

5. Explain the law relating to Confidential Information and Trade Secrets.

நம்பிக்கைக்குரிய தகவல்கள் மற்றும் வணிக ரகசியங்கள் குறித்த சட்டங்களை விளக்குக.

6. Explain the conditions for registration of Geographical Indication of goods under the Geographical Indications of Goods (Registration and Protection) Act, 1999?

பொருட்களின் புவியியல் குறியீடுகள் (பதிவு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 1999ன் கீழ் பொருட்களின் புவியியல் குறியீடுகளை பதிவு செய்வதற்கான நிபந்தனைகளை விளக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Passing off

வணிகப் போலி

(b) World Trade Organisation

உலக வர்த்தக அமைப்பு

(c) Piracy of Registered Design.

பதிவு செய்யப்பட்ட வடிவமைப்பினை திருடுதல்

(d) Mareva Injunction

மரீவா தடையாணை

(e) Budapest Treaty

புத்தாபெஸ்ட் உடன்படிக்கை

(f) Revocation of Patents

காப்புரிமையை திரும்பப் பெறுதல்

(g) Well know Trade Mark.

நன்கு அறியப்பட்ட வணிக முத்திரை.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. "A", a registered proprietor of a Design alleges that "B" by unauthorizedly applying his said design, has gained substantially. What are the remedies available to "A" under the Designs Act 2000.

"அ" என்பவர் ஒரு பதிவு பெற்ற வடிவமைப்பின் உரிமையாளர், "ஆ" என்பவருக்கு எதிராக தனது வடிவமைப்பை "ஆ" என்பவர் சட்ட விரோதமாக பயன்படுத்தி பயன் அடைந்துள்ளார் எனக் குற்றம் சுமத்துகிறார். "அ" என்பவருக்கு வடிவமைப்புச் சட்டம் 2000ன் கீழ் கிடைக்கக்கூடிய தீர்வழிகள் யாவை?

9. Arjun, a registered Trademark Owner gives licence to Babu to use his trademark. "Babu" transfers it to Cheran. Is it valid? Will it constitute valid Transfer? Decide.

அர்ஜுன் என்பவர் ஒரு பதிவு பெற்ற வணிக முத்திரையின் உரிமையாளர். பாபு என்பவருக்கு அம்முத்திரையை பயன்படுத்துவதற்கான உரிமம் வழங்குகிறார். பாபு என்பவர் சேரன் என்பவருக்கு அந்த உரிமத்தை மாற்றாக்கம் செய்கிறார். இது செல்லுமா? இது ஒரு செல்லத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துமா? முடிவு செய்க.

10. A film producer produced a picture by the combination of parts of two other pictures in a new way. He claims copyright protection for his film. Decide.

ஒரு திரைப்பட தயாரிப்பாளர், ஒரு திரைப்படத்தை இரண்டு வேறுபடங்களின் பகுதிகளை இணைத்து புதிய பாணியில் தயாரிக்கின்றார். அவர் தனது படத்திற்கு பதிப்புரிமை பாதுகாப்பினை கோருகின்றார். முடிவு செய்க.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

FAXC

6013–24

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Five-year Regular Course)

Fifth Year – Tenth Semester

HUMAN RIGHTS LAW

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Examine the human rights provisions in the U.N. Charter, 1945.

   1945 வருடத்திய ஐக்கிய நாடுகளின் சாசனத்திலுள்ள மனித உரிமைகள் குறித்த வகையங்களை ஆராய்க.

2. Define "Discrimination against Women". Explain the U.N.O.'s role to protect the Women's rights and list out the rights guaranteed under the CEDAW, 1979.

   'பெண்களுக்கு எதிரான பாகுபாடு' வரையறை செய்க. பெண்களின் உரிமைகளை பாதுகாப்பதில் ஐக்கிய நாடுகளின் அமைப்பின் பங்களிப்பை விவரித்து, CEDAW, 1979 ன் கீழ் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை வரிசைப்படுத்துக.

3. Discuss the rights of the individuals and state parties obligations under the International Covenant on Economic, Social and Cultural Rights, 1966.

   1966-ம் வருடத்திய சர்வதேச சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு உடன்படிக்கையின் கீழ் தனிநபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளையும் மற்றும் நாடுகளின் பொறுப்பு நிலைகளையும் விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the Civil and Political Rights guaranteed under the Indian Constitution.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் உறுதியளிக்கப்பட்டுள்ள குடிமையியல் மற்றும் அரசியல் உரிமைகளை விளக்கவும்.

5. Analyse in summary manner about the enforcement of rights contained in the International Covenants in India.

பன்னாட்டு உடன்படிக்கையிலுள்ள உரிமைகளை இந்தியாவில் செயலாக்கம் செய்வதற்குண்டான வழிகளை குருகு முறையில் ஆராயவும்.

6. Discuss the role of the 'Hague Law' and 'Geneva Law' in the war field.

போர்க்களத்தில் "ஜெனிவா சட்டம்" மற்றும் "ஹேக் சட்டம்" இவைகளின் பங்களிப்பை விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக:

(a) Definition of "Human Rights" under the Protection of Human Rights Act, 1993.

1993-ம் வருடத்திய மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் "மனித உரிமைகளின்" வரையறை.

(b) Human Rights Courts

மனித உரிமைகள் நீதிமன்றம்.

(c) Rights of Child

குழந்தைகளின் உரிமைகள்

(d) Right to Work

வேலை செய்யும் உரிமை

(e) The Social Contract Theory

சமூக-ஒப்பந்தக் கோட்பாடு

(f) UDHR

உலக மனித உரிமை பிரகடனம்

(g) Art. 23 of the Constitution.

அரசமைப்புச் சட்டத்தின் ஷரத்து 23.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The Parliament has passed a Criminal Procedure (Identification) Act, 2022. This Act authorised to authorities concerned collection of accused persons' physical and biological samples including fingerprint impressions, palm–print impressions, iris and retina scans, etc. The 'PUVR' Organization challenged the Constitutionality of the Act on the ground of violation of basic human rights of right to privacy. Can PUVR win the case?

2022ம் வருடம் பாரளுமன்றம் குற்றவியல் நடைமுறை (தேர்ந்தெடுப்பு) சட்டத்தை இயற்றியது. இச்சட்டமானது அதிகாரம் பெற்ற அமைப்புகள் குற்றம் சாட்டப்பட்டவரின் உடலமைப்பு மற்றும் உயிரியலமைப்புடன் கூடிய கை விரல் ரேகை அமைப்பு, உள்ளங்கை ரேகை அமைப்பு, கருவிழி அமைப்பு மற்றும் ரெட்டினா போன்றவற்றின் மாதிரியை எடுத்துக் கொள்ள அனுமதியளிக்கிறது. இச்சட்டத்தின் அரசமைப்புச் சட்டத்தின்படி செல்லும் தன்மையினை பி.யு.வி.ஆர் அமைப்பானது ஒரு நபரின் அந்தரங்க தனிப்பட்ட உரிமையான மனித உரிமையை மீறுவதாக உள்ளது எனக் கூறி எதிர்க்கிறது. இவ்வழக்கில் பி.யு.வி.ஆர் வெற்றி பெறுமா?

9. Mr. X was an undertrial prisoner. He was handcuffed and paraded on the streets by the Police. Mr. X petitioned the Supreme Court that his human right is violated. Decide.

திரு. X என்பவர் ஒரு விசாரணைக் கைதி. அவரை காவல் துறையினர் கைவிலங்கு பூட்டி தெருக்களில் ஊர்வலமாக கொண்டு சென்றனர். இதற்கு திரு. X என்பவர் உச்ச நீதிமன்றத்தில் மனு செய்து, இது தனது மனித உரிமையை மீறுவதாக உள்ளது என்று கோரினார். தீர்மானிக்கவும்.

10. 'A' filed a suit in a Civil Court. The case is pending for more than five years without arriving its finality. 'A' filed a petition in the Superior Court seeking direction to disposal of the suit on the ground that right to speedy disposal of case is a fundamental human right. Decide.

உரிமையியல் நீதிமன்றத்தில் 'அ' முதலேற்பு வழக்கு தாக்கல் செய்தார். ஆனால் அவ்வழக்கு ஐந்தாண்டுகளுக்கு மேலாக எந்தவொரு முடிவும் எட்டப்படாமல் நிலுவையில் உள்ளது. அதனால் 'அ' மேலமை நீதிமன்றத்தில் வழக்கை விரைந்து முடிக்க மனு தாக்கல் செய்து இவ்வாறு வழக்கை விரைந்து முடிக்காமல் இருப்பது அடிப்படை மனித உரிமையான விரைவு நீதி பெறுவதற்கு தடையாக உள்ளது எனக் கூறி வழக்கை விரைந்து முடிக்க ஆணை பிறப்பிக்கக் கோருகிறார். தீர்மானிக்கவும்.

---